பொருள் எண்.1

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் வினியோக பணிகளுக்கு தேவையான 4 பணியாளர்களை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்ததாரர் மூலம் 89 நாட்களுக்கு ( அக்டோபர் 2016 முதல் டிசம்பர் 2016 வரை) பணிக்கு அமர்த்துவதற்காக இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1555, நாள் 08.09.2016 –ன் படி பெறப்பட்ட அனுமதி காலம் டிசம்பர் 2016–டன் முடிவடையும் நிலையில், குடிநீர் விநியோக பணிகளின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு தொடர்ந்து வரும் 89 நாட்களுக்கு (பிப்ரவரி 2017 முதல் ஏப்ரல் 2017 ) 4 பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்ததாரர் மூலம் பணிக்கு அமர்த்துவதற்கும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.1,20,000/– இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ2/2691/2014

**தீர்மானம் எண்.1590அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.2

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஏ.வி.எம் கால்வாயில் செடிகள், புதர்கள் மற்றும் ஆகாய தாமரைகள் நிறைந்து காணப்பட்டதால், மழை காலஙகளில் மழை நீரானது கால்வாய் வழியாக சீராக செல்ல இயலாத நிலை ஏற்பட்டு, கால்வாயை சுற்றியுள்ள தாழ்வான பகுதிகளுக்குள் மழைநீர் செல்லும் அபாய நிலை மற்றும் சுகாதார சீர்கேடு உருவாகும் நிலையும் ஏற்பட்டது. மேலும் 06.10.2016–ம் தேதிய மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வு கூட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதால், ஏ.வி.எம் கால்வாய் செல்லும் கொட்டில்பாடு முதல் துறைமுகத்தெரு வரையிலான பகுதியில் காணப்படும் அடைப்புகளை ஜே.சி.பி மற்றும் டிப்பர் வாகனஙகளை பயன்படுத்தி மேற்கொள்வதற்கு ரூ.40,000/–க்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி, நகராட்சி சட்ட விதி 15–ன் கீழ் மேற்கொண்டு அதற்கான செலவினம் ரூ.40,000/– ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகியுள்ளதற்கு அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ1/1921–1/2016

**தீர்மானம் எண்.1591அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.3

இந்நகராட்சி 5—வது மாவட்ட உயர்மட்ட குழு கூட்டமர்விற்கான தணிக்கை பத்தி பதில்கள் ஜெராக்ஸ் எடுத்து ஸ்பைரல் பைண்டிங செய்த வகையில் செலவு ரூ.1170/— னை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.எச்1/2869/2013

**தீர்மானம் எண்.1592அஙகீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.4

இந்நகராட்சி தணிக்கை தடை பத்திகள் 30.09.2016 அன்றைய நிலையில் நிலுவையிலுள்ள தணிக்கை தடை தொகுப்பு அறிக்கை கணனி மூலம் தட்டச்சு செய்து ஜெராக்ஸ் எடுத்து பைண்டிங செய்த வகையில் ரூ.3420/— அருமனை இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி நிறுவனத்திற்கு வழஙக அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.எச்1/942/2012

**தீர்மானம் எண்.1593 அஙகீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.5

இந்நகராட்சிக்குட்பட்ட டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்கள்.3,8,9,13 ஆகிய கடைகளுக்கு 31.10.2016—ன் மூன்றாண்டுகள் உரிமம் முடிவடைந்துள்ளதால் மேலும் மூன்றாண்டுகளுக்கு உரிமம் நீட்டிப்பு செய்தும் , வாடகை தொகையில் 15% உயர்வு செய்தும் மற்றும் கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்.31 மேலும் அண்ணாசிலை அருகில் அமைந்துள்ள வெள்ளை ரோஜா சுய உதவி குழு கடை எண்.36 ஆகியவற்றிற்கு 31.12.2016 —டன் உரிமம் முடிவடைந்துள்ளதால் மேலும் மூன்றாண்டுகளுக்கு உரிமம் நீட்டிப்பு செய்யவும் அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

<u>கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடைகள்</u>:

| வ.எண் | வரிவிதிப்பு எண் | கடை எண் | உரிமைதாரர் பெயர் | தற்போதைய வாடகை | 15% உயர்வு செய்த தொகை | உயர்வு செய்யப்பட்ட பின்னர் வாடகை |
|---|---|---|---|---|---|---|

| | | | | | | தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2007039 | 3 | M.வேலப்பன் | 1620 | 243 | 1863 |
| 2 | 2007044 | 8 | M.பீர் முகம்மது | 1627 | 244 | 1871 |
| 3 | 2007045 | 9 | நைனாமுகம்மது | 1633 | 245 | 1878 |
| 4 | 2007049 | 13 | M.ஐனேசியாள் | 1627 | 244 | 1871 |

<u>கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை</u>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2007062 | 31 | ஐசக் | 1996 | 299 | 2295 |

<u>வெள்ளை ரோஜா சுயஉதவி குழு</u>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2005036 | 36 | சுயஉதவி குழு | 443 | 66 | 509 |

ந.க.எண்.அ1/2035/2002

**தீர்மானம் எண்.1594 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தை வளாகத்தில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி 2014–15–ன் கீழ் மீன் பதப்படுத்தும் மற்றும் சிறப்பு அங்காடி திட்டத்தின் கீழ் புதியதாக கட்டப்பட்டுள்ள குளிரூட்டும் அறை, 54 திறந்த வெளி கடைகள், 15 கடைகள் மற்றும் கழிப்பறை கட்டிடத்தினை பயன்பாட்டுக்காக கொண்டு வருவதற்கு குத்தகை இனஙகளின் படி, முன்வைப்புத்தொகை மற்றும் வாடகை மதிப்பீடு தயார் செய்து ஏலம் விட அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.அ1/2035/2002

**தீர்மானம் எண்.1595 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

இந்நகராட்சியில் காலியாக உள்ள 4 துப்புரவு பணியாளர் பணியிடஙகளை பூர்த்தி செய்ய மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் நாகர்கோவில் அவர்கள் வாயிலாக மக்கள் குரல்

பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டு ரூ.16920/—க்கான பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙக அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.சி1/218/2013

**தீர்மானம் எண்.1596 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சி பொதுப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கணினியில் UPS –ல் உள்ள Mother Board பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்திட பணியின் அவசியத்தை கருத்தில், நேரடியாக பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகள் குறித்த விபரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | M/S.Act Automation, Nagercoil | Rs.4100/- |
| 2 | M/S.Data Point, Nagercoil | Rs.4300/- |
| 3 | M/S.Ace Systems, Nagercoil | Rs.4450/- |

மேற்குறிப்பிட்ட விலைப்புள்ளிகளில் M/S.Act Automation, Nagercoil நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழஙகுவதற்கு அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.அ2/544/2006

**தீர்மானம் எண்.1597 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனஙகளில் அடிக்கடி ஏற்படும் சிறுசிறு பழுதுகள் பொது சுகாதார அவசியம் கருதி உடனடியாக உள்ளூர் பணிமனைகளில் சரி செய்ய வேண்டியுள்ளதால் உடனடி அத்தியாவசிய செலவுகள் மேற்கொள்ள ரூ.30000/—க்கு அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.எச்1/1407/2014

**தீர்மானம் எண்.1598 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு போதுமான துப்புரவு பணியாளர்கள் இல்லாமையால் பொது சுகாதார நலன் கருதி வடிகால் தூர்வாருதல் அபேட் மருந்து தெளித்தல் ஆகிய பணிகள் தினமும் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர், நாகர்கோவில் அவர்களின் தினக்கூலி பட்டியலின் படி 18 நபர்கள் கொண்ட ஜெயம் பெண்கள் சுய உதவிக்குழு மூலம் பணிகள் மேற்கொள்ள அக்டோபர் 2016 முதல் டிசம்பர் 2016 வரை 89 நாட்களுக்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண்.1553 நாள்.08.09.2016 –ல் ஒப்புதல் பெறப்பட்டு பணியமர்த்தப்பட்டது. மேலும் 18 நபர்கள் 89 நாட்களுக்கு (ஜனவரி 2017 முதல் மார்ச் 2017 வரை) பணியமர்த்த கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.530000/–க்கு அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.எச்1/1177/2014

**தீர்மானம் எண்.1599 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் உரக்கிடஙகில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர், நாகர்கோவில் அவர்களின் தினக்கூலி பட்டியலின்படி பணிகள் மேற்கொள்ள 10 நபர்கள் கொண்ட ஸ்டார் ஆண்கள் சுய உதவிக்குழுவின் மூலம் பணிகள் மேற்கொள்ள அக்டோபர் 2016 முதல் டிசம்பர் 2016 வரை 89 நாட்களுக்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண்.1552 நாள் 08.09.2016 –ல் ஒப்புதல் பெறப்பட்டு பணியமர்த்தப்பட்டது. மேலும் 10 நபர்கள் கொண்ட ஸ்டார் ஆண்கள் சுய உதவிக்குழு மூலம் 89 நாட்களுக்கு ( ஜனவரி 2017 முதல் மார்ச் 2017 வரை) பணிக்கு அமர்த்த கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ. 300000/–க்கு அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.எச்1/1368/2014

**தீர்மானம் எண்.1600 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர். அம்பேத்கார் வணிக வளாகத்தில் மீன் சந்தை மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி 2014–15–ன் கீழ் அதில் 15.00 இலட்சம் மதிப்பீட்டில் வாறுகால் பணி மேற்கொள்ளப்பட்டதில் மீதமுள்ள தொகையில் வாறுகால் பணி மேற்கொள்ளும் சேதமடைந்த சாலையினை சீர் செய்திட, மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்ட இனஙகளில் மதிப்பீட்டு தொகைக்குள்ளாகவே மேற்கொள்ள அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ1/2861/2014

**தீர்மானம் எண்.1601 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.13

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளுக்கும் 21 எண்ணம் ஆழ்துணை கிணறுகளிலிருந்து மின் மோட்டார்கள் மூலம் 10 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றப்பட்டு, தினமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் மின் மோட்டார்கள் நாள்தோறும் 20 மணி நேரம் இயங்கி வருவதால் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகம் செய்வதற்கு திறக்கப்படும் வால்வுகள் தினமும் திறந்து அடைக்க வேண்டியுள்ளதால் மேற்படி வால்வுகள் அடிக்கடி பழுதாகிறது. மேலும் பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்களில் அடிக்கடி உடைவு ஏற்படுவதால் குடிநீர் விநியோகம் தடைபடுகிறது. எனவே பொதுமக்கள் அனைவருக்கும் குடிநீர் சீரான முறையில் விநியோகம் செய்திட ரூ.5,00,000/– (ஐந்து லட்சம்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகராட்சி குடிநீர் (ம) வடிகால் நிதியில் செலவு செய்திட அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ1/1651–2/2016

**தீர்மானம் எண்.1602 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.14

இந்நகராட்சி பொறியியல் பிரிவு வாகனம் Jeep TN 74V3530 –ல் மின் கலம் பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்திட பணியின் அவசர அவசியம் மற்றும் முக்கியத்துவம் கருத்தில் கொண்டு, நேரடியாக உள்ளூர் விலைப்புள்ளி பெறப்பட்டதில் அதன் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | M/S.Lawrence Battery Service, Thingal Nagar | Rs.6800/- |
| 2. | M/S.Sai Battery Service, Colachel | Rs.6600/- |
| 3. | M/S.Christal Battery Centre, Thingal Nagar | Rs.6900/- |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில், குறைந்த விலைப்புள்ளியினை கொடுத்துள்ள M/S.Sai Battery Service, Colachel நிறுவனம் ரூ.6600/–க்கு கொடுத்துள்ளதை ஏற்று பணி உத்தரவு வழங்கி பணி செய்திடவும் மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ1/5030/2010

**தீர்மானம் எண்.1603 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.15

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் வணிக வளாகத்தில், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி 2014–15–ன் ரூ.2,53,63,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் நவீன மீன் சந்தை தொடர்பான பணிகளில், பயிற்சி பிரிவின் கீழ், “மீன் பதப்படுத்துதல் மற்றும் சிறப்பஙகாடி திட்டத்திற்கான மதிப்பு கூட்டு பயிற்சி அளித்தல்” பயிற்சி அளிக்கப்பட்டவர்களில் தேர்வு செய்யப்பட்டுள்ள 61 பயனாளிகளின் பட்டியல், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் எண்.DPC/A1/259/2014 நாள்.21.06.2016–ன் படி அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி 61 பயனாளிகள் தொடர்பான விவரஙகளை சரி பார்த்து, கையொப்பமிட்டு மீள சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளதால், பயனாளிகள் பட்டியல் அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

மேலும் 04.07.2016 அன்று திட்ட இயக்குநர் அவர்களால் ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கான நடத்தப்பட்ட கூட்டத்தில், கீழ்காணும் வகையில் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு 5 குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

1. மீன் வாஙகுதல்
2. மீன் சுத்தம் செய்தல்
3. மீன் விற்பனை செய்தல்
4. மீன் உணவு தயாரித்தல்
5. வரவு, செலவு கணக்கிடுதல்.

அதன் பின்னர், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் எண். DPC/A1/259/2014 நாள் 19.08.2016–ல் மேற்காணும் 61 பயனாளிகளும் தாஙகள் பெற்றுள்ள பயிற்சியின் அடிப்படையில் தொழில் செய்வதற்கு ஏதுவாக குளிர் சாதன சேமிப்பு அறையின் அருகில் 2 எண்ணம் ஷட்டர் போடப்பட்ட கடைகளும்(Shuttered Shops) அதன் அருகிலேயே 5 எண்ணம் திறந்த கடைகளும்(Open Stalls) நியாயமான வாடகை அடிப்படையில் வைப்புத் தொகையின்றி, மறு வாடகைக்கு விடப்படமாட்டாது என்ற பயனாளிகளுடனான பரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு, கடைகளை ஒதுக்கீடு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி விவரஙகள் அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.இ1/2861/2014

**தீர்மானம் எண்.1604 அஙகீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.16

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் பேருந்து நிலைய உரிமம் புதுப்பித்திட வேண்டி வட்டார போக்குவரத்து வாகன ஆய்வர் ஆய்வில் தெரிவிக்க பேருந்து நிலையத்தினுள் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, இருக்கை வசதி, மின் விளக்கு வசதி மற்றும் கழிவறை வசதிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.51000/– மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணியின் அவசர அவசியம் மற்றும் முக்கியத்துவம் கருத்தில் கொண்டும் நகராட்சி சட்ட விதி 15–ன் கீழ் மேற்கொண்டு அதற்கான செலவினம் ரூ.49839/–னை நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகப்படவுள்ள விவரத்திற்கு அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ1/2436–1/2016

தீர்மானம் எண்.1605 அஙகீகரிக்கப்பட்டது.

பொருள் எண்.17

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினி ஆட்டோ வாகனம் எண்.TN-75-P-8399–க்கு தகுதி சான்று புதுப்பிப்பதற்கான கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவுத் தொகை ரூ. 34500/–க்கு அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

<u>பணிகளின் விவரம் கீழ்வருமாறு</u>

1. இஞ்சின் ஆயில் மாற்றுதல்
2. கூலண்ட் ஆயில் மாற்றுதல்
3. பிரேக் ஆயில் மாற்றுதல்
4. ஏர் பில்டர் மாற்றுதல்
5. டீசல் பில்டர் மாற்றுதல்
6. ஆயில் பில்டர் மாற்றுதல்
7. இஞ்சின் பெட் ரப்பன் மாற்றுதல்
8. இஞ்சின் பெட் பிராக்கெட் மாற்றுதல்
9. கிளச் அசெம்பிளி மாற்றுதல்
10. ஆயில் பிரெஸர் சுவிச் மாற்றுதல்
11. டெம்பரேச்சர் சுவிச் மாற்றுதல்
12. சைலன்சர் பேக்கிங மாற்றுதல்
13. பெயிண்டிங ஒர்க்
14. ஸ்டிக்கர் ரைட்டிங ஒர்க்
15. சீட் ஒர்க்
16. பிளைவீல் டிஸ்க் மாற்றுதல்

ந.க.எண்.எச்1/1406/2014

தீர்மானம் எண்.1606 அஙகீகரிக்கப்பட்டது.

பொருள் எண்.18

இந்நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவத்திற்கு மார்ச் 2016 முதல் டிசம்பர் 2016 முடிய நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யப்பட்ட தொகையும், உணவுகள் விற்பனை செய்யப்பட்ட விவரம் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| மாதம் | வரவு | செலவு |
|---|---|---|
| மார்ச் 2016 | 93900 | 345999 |
| ஏப்ரல் 2016 | 86900 | 342420 |
| மே 2016 | 100300 | 239791 |
| ஜுன் 2016 | 108000 | 264398 |
| ஜீலை 2016 | 111600 | 380495 |
| ஆகஸ்ட் 2016 | 111000 | 226509 |
| செப்டம்பர் 2016 | 94700 | 235803 |
| அக்டோபர் 2016 | 107100 | 301263 |
| நவம்பர் 2016 | 100100 | 240774 |
| டிசம்பர் 2016 | 97500 | 250427 |

ந.க.எண்.அ1/1117/2015

தீர்மானம் எண்.1607 அங்கீகரிக்கப்பட்டது.

பொருள் எண்.19

இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு குடிநீர் வாகனம் TN74Z5304–ல் தகுதி சான்று 10.02.2017 அன்றுடன் முடிவடைவதால் 2017–2018–ம் ஆண்டிற்கு தகுதி சான்று புதுப்பித்திட வேண்டி மேற்படி வாகனத்தில் ஏற்பட்ட பழுதுகளை சரி செய்திட ரூ.34000/– மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ1/5754/2010

தீர்மானம் எண்.1608 அங்கீகரிக்கப்பட்டது.

பொருள் எண்.20

இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் ஜீப் TN74Y3530-ல் இஞ்சின் மற்றும் Oil Filter மாற்றுதல் மற்றும் வாகனம் Full Service செய்திட பணியின் அவசர அவசியம் கருதி M/S.Kodai Cars (Pvt) Limited, நாகர்கோவில் நிறுவனம் மூலம் சரி செய்யப்பட்டதற்கும், அதற்கான பட்டியல் தொகை ரூ.1024/—னை நகராட்சி பொது நிதியில் வழஙகிடவும் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ1/5030/2010

தீர்மானம் எண்.1609 அங்கீகரிக்கப்பட்டது.

பொருள் எண்.21

குளச்சல் நகராட்சியில் பராமரிக்கப்படும் கட்டிடஙகளின் மேற்கூரையில் சூரிய மின்சக்தி ஆலைகள் அமைத்திட சாத்திய கூறுகளை ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் வாய்ப்புள்ள கட்டிடஙகள் மீது சூரிய மின்சக்தி ஆலைகள் மின்உற்பத்தி செய்யும் திட்டம் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி உரிய கலந்தாலோசகரை நியமித்து ஒப்பந்த படிவம் தயாரித்திடவும் மற்றும் ஒப்பந்த செயல்முறை மேலாண்மை செய்திட வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு உரிய நிர்வாக அனுமதி பெற்று பணியினை செயல்படுத்திட மன்றம் தீர்மானிக்கிறது.

மேற்படி, சூரிய மின்சக்தி ஆலைகள் அமைத்து மின் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு 100 விழுக்காடு முதலீடு செய்திடவும், இந்த முதலீட்டு தொகையினை, மின் உற்பத்தி மூலம் ஈட்டிட தேவைப்படும் காலம் வரை சூரிய மின்சக்தி ஆலைகளை இயக்கி பராமரித்தல் உட்பட அனைத்து தொடர்பு வேலைகளையும் செய்திடவும், முன்வரும் புதுப்பிப்பு மின் திறன் சேமிப்பு நிறுவனஙகள் / முதலீட்டாளர்கள்/ ஒப்பந்தபுள்ளி போட்டியாளர்களை வரவேற்று பணி செயலாக்கம் செய்திட மன்றம் தீர்மானிக்கிறது.

ந.க.எண் 179/2013/இ1

தீர்மானம் எண்.1610 அங்கீகரிக்கப்பட்டது.

தனி அலுவலர்
குளச்சல் நகராட்சி